09-10-2017

வண. ரிச்சார்ட் ஹியூலட்,

தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரி நிதியத்துக்கான தர்மகர்த்தா சபை

வணக்கத்துக்குரிய ஹியூலட் அவர்களுக்கு,

**யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபையின் அண்மைக்காலப் போக்குகள் தொடர்பான கடிதம்**

வட்டுக்கோட்டையில் இருந்து உங்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்!

இன்று யாழ்ப்பாணக் கல்லூரி என்ற பெயரில் எமது கிராமத்திலே இயங்கிக் கொண்டிருக்கும் கல்லூரி 19ஆம் நூற்றாண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. பற்றிக்கோட்டா செமினரி 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே மூடப்பட்டதன் பின்னர் , 1872இல் யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்படுவதிலே யாழ்ப்பாணத்தினையும், எமது கிராமத்தினையும் சேர்ந்தவர்கள் முக்கிய பங்கு வகித்தனர். புதிய ஒரு கல்லூரி எமது பிராந்தியத்திலே உருவாக வேண்டும் என்பதிலே உள்ளூர் மக்கள் மிகுந்த ஆர்வம் மிக்கவர்களாக இருந்தனர். 1872இல் இந்தக் கல்லூரி மீளவும் ஆரம்பிக்கப்பட்ட போது எமது கிராமத்தினைச் சேர்ந்தவர்களும் தமது பொருளாதார வலுவுக்கு ஏற்ப ஒரு பணத்தொகையினை இந்தக் கல்லூரியின் வளர்ச்சிக்காக மிசனரிகளிடம் கையளித்தனர் என்பதற்கு மிசனரிகளால் எழுதப்பட்ட புத்தகங்களிலும், ஆவணங்களிலும் ஆதாரங்கள் இருக்கின்றன.

உள்ளூர் மக்கள் ஒரு கல்வித் தாபனத்தினை அன்று "பற்றிக்கோட்டா" என்று ஆங்கிலத்திலே அழைக்கப்பட்ட வட்டுக்கோட்டையில் ஆரம்பிக்க எடுத்த முயற்சிகள் அப்போது சிலோனின் வடக்கிலே சமய, சமூக மற்றும் கல்விப் பணிகளில் ஈடுபட்டிருந்த அமெரிக்க மிசனரிமார்களின் பெருத்த ஆதரவினைப் பெற்றது. உள்ளூர்வாசிகளின் இந்த முயற்சியினை ஊக்கப்படுத்தும் வகையில் மிசனரிகள் தமக்குத் தெரிந்தவர்களின் உதவியுடன் இந்தக் கல்லூரிக்காக அமெரிக்காவிலும் நிதி சேகரிக்கும் பணிகளை ஆரம்பித்தனர். அத்துடன், அன்றைய காலத்தில் அமெரிக்க மிசனின் பாவனையில் இருந்த பல கட்டடங்களையும் யாழ்ப்பாணக் கல்லூரிக்காக அமெரிக்க மிசனரிகள் வழங்கினர். யாழ்ப்பாணக் கல்லூரியினைத் தோற்றுவிப்பதில் பற்றிக்கோட்டா செமினரியில் கல்வி கற்று வெளியேறி இருந்த பல பழைய மாணவர்கள் முன்னின்றனர். பற்றிக்கோட்டா செமினரியின் இறுதி அதிபரான வண கலாநிதி ஹேஸ்டிங்ஸ் அவர்களே யாழ்ப்பாணக் கல்லூரியின் முதலாவது அதிபராகவும் நியமிக்கப்பட்டார். அந்த வகையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பற்றிக்கோட்டா செமினரியினது பங்கு மிகவும் முக்கியமானது என்பதனை நாம் உணர்வோம்.

கல்லூரியினைத் தோற்றுவிப்பதில் முன்னின்று உழைத்த எமது மூதாதையோரினையும், அவர்களுக்குத் தமது ஆதரவினை வழங்கிய அமெரிக்க மிசனரிமாரினையும் நாம் நன்றியுடன் இன்றும் நினைவுகூருகிறோம். உள்ளூர் மக்களினதும், அமெரிக்க மிசனரிகளினதும் ஒத்துழைப்புடன் உருவாகிய இந்தக் கல்லூரியின் தேவைகளுக்காக சேகரிக்கப்பட்ட நிதியினைப் பாதுகாத்து, அதனை மேலும் பன்மடங்காகப் பெருக்கி இந்தக் கல்லூரி கடந்த 145 வருடங்களாக இடைவிடாது கல்விச் சேவைகளை எமது பிராந்திய மக்களுக்கு வழங்கிவருவதற்கு உறுதுணையாக இருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி நிதியத்துக்கான தர்மகர்த்தா சபையினருக்கு வட்டுக்கோட்டை மக்களாகிய நாம் எமது மனப்பூர்வமான நன்றிகளை வெளிப்படுத்துகிறோம்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளினையும் எமது மூதாதையர்களுக்குக் கற்பித்த இந்தக் கல்லூரியில் இருந்து பலர் வைத்தியர்களாகவும், பொறியிலாளர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், கணக்காளர்களாகவும், வங்கியாளர்களாகவும், கல்வியாளர்களாகவும், பத்திரிகையாளர்களாகவும்,

ஆசிரியர்களாகவும், தொழிநுட்ப வல்லுநர்களாகவும், வியாபாரத் துறையில் சாதனை படைத்தவர்களாகவும், சிறப்பான விளையாட்டுத் துறை வல்லுநர்களாகவும், தத்தமது துறைகளிலே விற்பன்னர்களாக உலகெங்கும் பரந்து வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையிலும் உலகின் பல பகுதிகளிலும் இடம்பெறும் இனவாதத்துக்கு எதிரான போராட்டங்களிலும், உழைக்கும் மக்களின் போராட்டங்கள், சுயநிர்ணய உரிமை, மனித உரிமைகள், பெண் விடுதலை, சாதி ஒழிப்புப் போன்ற விடயங்களிலும் யாழ்ப்பாணக் கல்லூரியில் பயின்ற பலர் தீவிரமாக ஈடுபட்டு சமூக மாற்றங்களை ஏற்படுத்தப் பாடுபட்டிருக்கின்றனர். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மதச்சார்பற்ற, சமூக நீதியினையும், இன, மொழி, கலாசார பல்வகைமையினையும் வலியுறுத்தி, பிரித்தானிய காலனித்துவத்துக்கு எதிராகப் போராடிய அமைப்பான யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என்ற அமைப்பு யாழ்ப்பாணக் கல்லூரியிலேயே ஆரம்பமானது. இலங்கையின் சுதந்திரப் போராட்ட இயக்கங்களில் மிகவும் முற்போக்கான இயக்கங்களில் ஒன்றாக இந்த அமைப்பினை வரலாற்றாசிரியர்கள் விதந்துரைக்கிறார்கள்.

சமூக ரீதியில் பார்க்குமிடத்து, கீழ் நடுத்தர வர்க்கத்தினர், விவசாயிகள், தொழிலாளர்கள், சமூகத்தின் தாழ்த்தப்பட்ட சாதியினர், பெண்கள் எனப் பல்வேறு தரப்பினரும் சமத்துவமாகக் கல்வி கற்கக் கூடிய ஒரு நிலையமாக யாழ்ப்பாணக் கல்லூரி விளங்கியிருக்கிறது. இதனால் எமது வட்டுக்கோட்டைக் கிராமத்திலே கல்வியிலே பாண்டித்தியம் பெற்ற, கலை இரசனை மிக்க, விளையாட்டுத் துறையில் சிறப்பு வாய்ந்த, இரு மொழிகளிலும் புலமை பெற்ற ஓர் ஆரோக்கியமான சமூகம் கடந்த நூற்றாண்டிலே தோற்றம் பெற்றது.

அண்மைய சில வருடங்களாக யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகள் எமது கல்லூரியின் நம்பகத் தன்மையினையும், அதற்கு யாழ்ப்பாணத்திலும், எமது நாட்டிலும், பிறநாடுகளிலும் இருந்த நன்மதிப்பினையும் மிகவும் ஆழமாகப் பாதித்துள்ளன. ஆசிரியர் நியமனத்தில் அண்மைக் காலத்தில் பலத்த முறைகேடுகள் நிகழ்ந்துள்ளன என்பது வெளிப்படையான ஒரு விடயமாகும். ஆளுநர் சபைக்கு நெருக்கமானவர்களுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் கல்லூரியிலே வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே போல உரிய தகைமைகள் அற்ற பல ஆசிரியர்கள் தமக்குச் சம்பந்தமில்லாத பல பாடங்களை எமது கிராமத்தினைச் சேர்ந்த பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறார்கள். உதாரணமாக விஞ்ஞான பாடங்களிலே பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள் ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்பிக்கிறார்கள். ஆங்கிலம் போன்ற பாடங்களை அந்தத் துறையில் எந்த விதமான பொருத்தமான தகைமைகளையோ, நீண்ட காலப் பயிற்சியினையோ பெறாதவர்கள் கற்பிக்கிறார்கள். ஆங்கிலக் கல்விக்கு ஒரு காலத்தில் நாட்டிலேயே புகழ் பெற்ற நிலையமாக விளங்கிய யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்கும் எமது கிராமத்தினைச் சேர்ந்த பிள்ளைகளுக்குப் போதிய தகுதி அற்ற ஆசிரியர்கள் ஆங்கிலம் கற்பிக்கும் கவலைக்கிடமான நிலைமை இன்று தோன்றியுள்ளது. பாடசாலையில் நேர அட்டவணைக்குப் பொறுப்பாக இருக்கும் நிருவாகிகள் ஆசிரியர்களின் கல்வித் தகைமைகளுக்கும், அவர்கள் கல்லூரியில் கற்பிக்கும் பாடங்களுக்கும் இடையில் இருக்கும் இடைவெளிகள், தொடர்பின்மை என்பன குறித்து சற்றும் சிந்தனை அற்றவர்களாக இருப்பது சமூகத்தினைச் சேர்ந்த எமக்கு அதிர்ச்சியளிப்பதாக இருக்கிறது. இவ்வாறான போக்குகளினாலும், பல ஆசிரியர்கள் உரிய முறையில் பாடவிதானத்தினை உரிய நேரத்தில் பூர்த்தி செய்யாமையினாலும், எமது பிள்ளைகள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கபட்டுள்ளார்கள். இதனால் மாணவர்கள் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான நேரம் குறைவாகிப் போகிறது. மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கு இந்தத் தனியார் கல்வி நிலையங்களே இன்று முக்கிய பங்களிப்புச் செய்யும் நிலையங்களாக மாறியுள்ளன. பாடசாலை நோக்கம் எதுவுமற்ற ஒரு நிலையமாக மாறிப் போய் இருக்கிறது. மேலும் பாடசாலையின் கட்டடங்கள், ஆய்வுகூடங்கள், விளையாட்டு மைதானம் போன்றன கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. சில ஆசிரியர்கள் கல்லூரியினைத் தமது வியாபார நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதும் எமக்கு வேதனை அளிக்கிறது.

பொருத்தமான ஓர் ஆளுநர் சபையும், பொருத்தமான நிருவாகிகளும், பொருத்தமான ஆசிரியர்களும் நியமிக்கப்படின் யாழ்ப்பாணக் கல்லூரியினால் வழங்கப்படும் கல்வியினதும், இணைப்பாடவிதானச்

செயற்பாடுகளினதும் தரம் மேலும் அதிகரிக்கும் என்பது எமது எண்ணமாகும். இதன் மூலம் எமது கிராமமும் மேலும் வளர்ச்சி அடையும்.

கல்லூரியில் இடம்பெறும் நிருவாகச் சீர்கேடுகளைக் கண்டிக்கும் வகையிலும், கல்லூரி நிருவாகமும், ஆளுநர் சபையும் ஜனநாயகம், வெளிப்படைத் தன்மை, நேர்மை என்பவற்றினைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் கோரி, கல்லூரியின் தேவைகளுக்கான நிதியினை அனுப்பி வைக்கும் பொறுப்புத் தர்மகர்த்தா சபையினராகிய நீங்கள் கல்லூரிக்கு ஒதுக்கப்படும் நிதியில் 20%இனை இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து மூன்று காலாண்டுகளாகத் தொடர்ந்து குறைத்து வருகின்றமையினை நாம் அறிந்திருக்கிறோம். பல்வேறு நியாயமான நிருவாகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் படி நீங்கள் ஆளுநர் சபையினைக் கேட்டிருந்த போதிலும், உங்களுடைய கோரிக்கைகளுக்குப் பொருத்தமான பதில்களை வழங்காது ஆளுநர் சபையினர் தொடர்ந்தும் இழுத்தடிக்கும் போக்கினைக் கடைப்பிடிக்கிறார்கள். நீங்கள் உங்களது கடிதங்களிலே முன்மொழிந்திருக்கும் சீர்திருத்தங்கள் யாவும் மிகவும் ஆரோக்கியமானவை. அவை கல்லூரியின் வளர்ச்சிக்கும், நம்பகத்தன்மைக்கும் அவசியமானவை. அவற்றினை நாம் முழுமனதுடன் வரவேற்கிறோம்.

கல்லூரியின் நிருவாகம் தொடர்பாக வெளிப்படைத் தன்மை பேணப்படல் வேண்டும் என்று நீங்கள் பல்வேறு கடிதங்களிலே வலியுறுத்திச் சொன்ன போதிலும், கல்லூரியின் ஆளுநர் சபையின் யாப்பினை தமது உறுப்பினர்களில் ஒருவரான, கல்லூரியின் பழைய மாணவர்களின் பிரதிநிதியும், யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த சட்டத்தரணிகளில் ஒருவருமான, எமது கிராமத்தினைச் சேர்ந்த திரு கனகரட்ணம் சுகாஸ் அவர்களுக்கு அவர் பல முறை கேட்டும் ஆளுநர் சபையினர் அதனை அவருக்கு வழங்காது இருக்கின்றனர். இது ஆளுநர் சபையின் நேர்மையின்மையினையே எடுத்துக்காட்டுகிறது. மாணவத் தலைவர்களைத் தெரிவு செய்யும் போது கூட ஜனநாயக முறையில் தேர்தல்கள் நடாத்தப்படும் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையினர் ஜனநாயக விரோதமான முறையில் செயற்படுகின்றமையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த நிலையிலே கல்லூரி தொடரபாகவும், ஆளுநர் சபை தொடர்பாகவும் உங்களுடன் கலந்துரையாடுவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அமெரிக்காவுக்குச் சென்றிருந்ததாக நாம் கேள்விப்படுகிறோம். பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. அவர் இந்தக் கல்லூரியில் கல்வி கற்கவுமில்லை; அதனுடன் தொடர்பான விடயங்களில் கடந்த சில ஆண்டுகள் வரை அவர் எந்த ஈடுபாடும் காட்டவுமில்லை. அவ்வாறான ஒருவரினைத் தர்மகர்த்தா சபையினருடன் உரையாடுவதற்கு ஆளுநர் சபையின் தலைமை அனுப்பியுள்ளமை ஆளுநர் சபையின் நேர்மையற்ற தன்மையினை வெளிக்காட்டுகிறது. சுமந்திரன் ஆளுநர் சபையின் தலைவர் எதிர்கொள்ளும் வழக்குக்களிலே அவர் சார்பாக ஆஜராகி வருகிறார் என்பது எம் எல்லோருக்கும் தெரியும். இந்த வகையில் அவர் பாடசாலை தொடர்பாகவும், ஆளுநர் சபை தொடர்பாகவும் உங்களுக்குச் சொல்லி இருக்கும் கருத்துக்கள் பக்கச்சார்பானவையாகவே அமைந்திருக்கும்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுநர் சபையில் அங்கம் வகிக்கும் கலாநிதி செல்வி செல்லையா, திருமதி சுகந்தி வைரசிங்க, செல்வி விஜுலா அருளானந்தம், வண. பத்மதயாளன் போன்றவர்கள் கொழும்பினைத் தமது வாழ்விடமாகக் கொண்டவர்கள். இவர்கள் எமது பிள்ளைகளின் கல்வி தொடர்பாகவோ, பாடசாலையின் நலன் தொடர்பாகவோ கிராமத்தவர்களான எம்முடன் எந்தக் கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளுவதில்லை. இவர்களிலே சிலர் கொழும்பில் இருந்து கூட்டங்களிலே கலந்துகொள்ளுவதற்கு மாத்திரமே வட்டுக்கோட்டைக்கு வந்து போகின்றனர். செல்வி விஜுலா அருளானந்தம் பாடசாலையின் பாரம்பரியத்தினை மாற்றி அமைக்கும் வகையில், பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு அதிபர் தலைமை தாங்கும் முறை நீக்கப்பட்டமையினை நியாயப்படுத்தியும் இருக்கிறார். சில வேளைகளில் பாடசாலையின் ஆளுநர் சபைக் கூட்டங்கள் கொழும்பிலும் நடைபெறுகின்றன. வட்டுக்கோட்டையில் இருக்கும் ஒரு பாடசாலையின் ஆளுநர் சபையின் கூட்டங்கள் என்ன காரணத்துக்காகக் கொழும்பில் நடைபெற வேண்டும்?

நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும் ஆளுநர் சபையில் இடம்பெறுவது எமது எமது கல்லூரியின் வளர்ச்சிக்காகப் புதிய சிந்தனைகளையும், புதிய திட்டங்களையும் நாம் பெற்றுக்கொள்ள உதவியாக அமையும். ஆனால், தற்போதைய ஆளுநர் சபையினர் யாழ்ப்பாணத்துக்கு வெளியில் இருப்பவர்களையும், கல்லூரி பற்றியோ அதனது வரலாறு பற்றியோ,

அதன் பாரம்பரியங்கள் பற்றியோ, அல்லது கல்லூரியினால் நன்மை பெறும் சமூகம் பற்றியோ தெரிந்திராதவர்களையும், அவ்விடயங்கள் தொடர்பில் சற்றும் அக்கறை அற்றவர்களையும் தமது குழுவிலே நியமிப்பதன் நோக்கம், கல்லூரியின் மீது சமூகத்துக்கு இருக்கும் பிடிமானத்தினை நீர்த்துப் போகச் செய்வதற்காகவே என நாம் எண்ணுகிறோம். பாடசாலைச் சமூகத்துடன் தொடர்புகளைப் பேணாதவர்கள் கல்லூரியின் ஆளுநர் சபையில் அங்கம் வகிக்கும் போது, கல்லூரியில் நடைபெறும் முறைகேடுகளை நாம் ஆளுநர் சபையின் கவனத்துக்குக் கொண்டு செல்லுவதும் கடினமாகிறது. இது, ஆளுநர் சபையின் தலைமையும், அங்கு ஆதிக்கம் செலுத்தும் ஒரு சிலரும் தாம் விரும்பிய எல்லாவற்றினையும், வெளிப்படைத்தன்மை அற்ற வகையிலும், எந்த விதமான சமூக பொறுப்புணர்வும் அற்ற முறையிலும் செய்வதற்கு வழியினை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு புரட்டத்தாந்துக் கிறீஸ்தவப் பாடசாலையாக இருப்பினும், வட்டுக்கோட்டையிலும் அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் இந்துக்களும் கிறீஸ்தவர்களும் ஒருவரை ஒருவர் மதித்து, சமூகப் பல்வகைமை பாதிக்கப்படாது இருக்கும் வகையில் காலங்காலமாகத் தோளோடு தோள் நின்று தொழிற்படுவதற்கு யாழ்ப்பாணக் கல்லூரி பங்களிப்புச் செய்திருக்கிறது. கல்லூரியின் நலனுக்காகத் தர்மகர்த்தா சபையினராகிய நீங்கள் முன்வைத்திருக்கும் சிபாரிசுகளும், சீர்திருத்தங்களும் கிறீஸ்தவ மத விழுமியங்களுக்குப் பொருத்தமற்றவை என்ற தோரணையில் ஆளுநர் சபையினர் உங்களுக்குப் பதில் அளித்திருப்பதனை நாம் அறிவோம். இது அவர்கள் தமது நேர்மையற்ற செயற்பாடுகளை மூடி மறைப்பதற்கு மேற்கொள்ளும் ஒரு உத்தியே ஆகும்.

யாழ்ப்பாணக் கல்லூரி தொடர்ந்து கிறீஸ்தவப் பாடசாலையாகவும், கிறீஸ்தவ மதத்திலே சொல்லப்பட்டிருக்கும் அன்பு, கருணை, நேர்மை, உண்மை, அனைவரினையும் மதித்து உள்வாங்கிச் செயற்படும் தன்மை போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கும், அந்த விழுமியங்களுக்கு இணங்கச் செயற்படும் ஒரு பாடசாலையாக இருக்க வேண்டும் என்பதே எமது கிராமத்தவரின் பெரு விருப்பாகும். நேர்மையான ஆளுநர் குழுவினர் செயற்பட்ட காலங்களிலும் கூட யாழ்ப்பாணக் கல்லூரி கிறீஸ்தவப் பாடசாலையாகவே இருந்தது.

தற்போது இருக்கும் ஆளுநர் சபை பாடசாலையில் இருந்து காலங்காலமாக நன்மையினைப் பெற்ற வட்டுக்கோட்டையினதும் அதனைச் சூழவுள்ள ஏனைய கிராமத்தவர்களினதும் நம்பகத்தன்மையினை இழந்துவிட்டது. நேர்மையற்றவர்களினதும், ஊழல் புரிபவர்களினதும் கூடாரமாகவும் ஆளுநர் சபை மாறிவிட்டது. இந்த வகையிலே தர்மகர்த்தா சபையினராகிய தாங்கள் கல்லூரிக்கு வழங்கும் நிதியினை நேர்மையும் நம்பகத் தன்மையும் மிக்க ஒரு குழுவினரின் ஊடாகப் பாடசாலைக்கு வழங்குவதே பொருத்தமாக இருக்கும் என வட்டுக்கோட்டை மக்களாகிய நாம் நினைக்கிறோம். இந்தக் குழுவினரே எதிர்காலத்தில் பாடசாலைக்கான ஆளுநர் சபையினை நடாத்துபவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே சமூகத்தினராகிய எமது விருப்பமாகும்.

யாழ்ப்பாணக் கல்லூரி வடபகுதி மக்களின் முயற்சிகளினால் ஆரம்பிக்கப்பட்ட போது அது எந்த ஒரு திருச்சபைக்கும் தனித்து முன்னுரிமை கொடுக்காத ஒரு புரட்டத்தாந்துக் கிறீஸ்தவக் கல்லூரியாகவே தோற்றுவிக்கப்பட்டது. 1894ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஆளுநர் சபைக்கான பதிவுச் சட்டத்திலே இந்த விடயம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. காலவோட்டத்திலே கல்லூரியின் ஆளுநர் சபையின் பெரும்பாலான பதவிகளைத் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் அத்தியட்சாதீனத்தினர் வகித்தனர். ஒரு குறித்த திருச்சபையினரிடம் அதிகாரம் குவிக்கப்பட்டமையே இன்று கல்லூரியில் குழப்பங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது. இந்த நிலையிலே எமது கல்லூரி எந்த ஒரு திருச்சபையினதும் தனி ஆதிக்கத்துக்கு உட்படாத, ஆனால் கிறீஸ்தவக் கல்லூரியாக மீளவும் மாற்றப்படல் வேண்டும். இந்த வகையில் பாடசாலையின் நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும், நிதிப் பரிபாலனத்தினை மேற்கொள்ளுவதற்கும் அமைக்கப்படும் குழுவானது வட பகுதியில் இருக்கும் எல்லா முக்கியமான புரட்டத்தாந்து கிறீஸ்தவத் திருச்சபைகளினையும் உள்ளடக்க வேண்டும்.

அத்துடன் இந்தக் குழுவிலே கல்வியாளர்களும் இடம்பெற வேண்டும். யாழ்ப்பாணக் கல்லூரியிலே கல்வி கற்ற பழைய மாணவர்கள் பலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் விரிவுரையாளர்களாகவும், பேராசிரியர்களாகவும் கடமையாற்றுகிறார்கள். கல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் நாட்டில் உள்ள பல

பாடசாலைகளிலே அதிபர்களாகவும், நாட்டின் கல்வித் திணைக்களத்திலே கல்வி வழிகாட்டுநர்களாகவும், கல்விப் பணிப்பாளர்களாகவும் வெவ்வேறு மட்டங்களிலே பதவி வகிக்கிறார்கள். அத்துடன் பலர் தமது கல்விப் பணிகளைப் பூர்த்தி செய்து ஓய்வு நிலை பெற்றிருக்கிறார்கள். இவர்களும் எமது கல்லூரியின் நிருவாகத்துக்கு வழிகாட்டக் கூடிய வகையில் ஆலோசனைகளை வழங்க வல்லவர்கள். கல்லூரியின் நிதி நிருவாகத்துக்கு வழிகாட்டும் வகையில் கல்லூரியின் பழைய மாணவர்களாக இருக்கும் வங்கியாளர்கள் அமைவர். அத்துடன் சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்குவதற்கு எமது கல்லூரியின் பழைய மாணவர் சட்டத்தரணிகள் பலர் இருக்கின்றனர். இதனை விட நாட்டிலே இருக்கும் மனித உரிமை ஆர்வலர்கள், சமூக நீதிக்கான செயற்பாட்டாளர்கள் எனப் பலரின் சேவைகளையும் நாம் கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பெற முடியும்.

கல்லூரியினை நிருவகிக்கும் குழுவில் இருக்கும் எல்லோரும் பழைய மாணவர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை என்பதனையும் நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இந்தப் புதிய நிருவாகக் கட்டமைப்பில் பாடசாலையிலே கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களும் உரிய பங்கினை வகிக்க வேண்டும். இதன் பொருட்டு பெற்றோர் சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

கல்லூரியினைக் கிறீஸ்தவ மதத்தின் விழுமியங்களின் அடிப்படையில், நேர்மையான முறையிலும் திறமையான முறையிலும் கொண்டு நடாத்தக் கூடிய புத்தாக்க சிந்தனை மிக்க பலர் எமது சமூகத்திலே இருக்கிறார்கள். அவர்களினால் எமது கல்லூரியினை மீளவும் நல்ல நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என நாம் திடமாக நம்புகிறோம். அவ்வாறானவர்களுக்கு ஆளுநர் சபையிலும், பாடசாலையிலும் தற்போது எந்த முக்கியத்துவமும் வழங்கப்படுவதில்லை. அவ்வாறானவர்கள் இருக்கத்தக்கதாக நேர்மை, வெளிப்படைத் தன்மை, ஜனநாயகம் என்பவற்றினைச் சற்றும் மதிக்காத, அகந்தையும், சுயநலமும் மிக்கவர்களினதும், பாடசாலை மீதும் அது சார்ந்த சமூகத்தின் மீதும் அக்கறை காட்டாத ஒரு குழுவினரினதும் மத்தியில் வரலாற்றுச் சிறப்புமிக்க எமது பாடசாலை சென்று சேர்ந்துள்ளமை பாடசாலையில் இருந்து பல தலைமுறைகளாகக் கல்விச் சேவைகளைப் பெற்ற எமக்கு வேதனையினை அளிக்கிறது. இந்த வகையில் தர்மகர்த்தா சபையினராகிய நீங்கள் பொறுப்புணர்வு மிக்கவர்களின் கைகளில் எமது பாடசாலையின் ஆளுநர் சபையின் நிருவாகம் சென்று சேருவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என நாம் உங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இதுவே எமது பாடசாலையின் வரலாற்றில் ஒரு புதிய முற்போக்கான அத்தியாத்தினைத் தோற்றுவிக்கும் என நாம் திடமாக நம்புகிறோம். இந்த நல்ல நோக்குக்காக நீங்கள் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளுக்கும் எமது ஆதரவு நிச்சயமாக இருக்கும் என்பதனை நாம் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

நன்றி.

| No | Full Name | Address | Signature |
|---|---|---|---|